[6th September 1960

SRI V. SUBBIAH : பஞ்சாயத்து யூனியன் ஏற்படுவதற்கு முன்னால் அந்தந்த ஆசிரியர்களை அங்கங்கேயே வைத்துக் கொள்ளாமல், விரும்பாத ஆசிரியர்களை மாற்றுகிறார்கள் என்பது உண்மையா?

THE HON. SRI C. SUBRAMANIAM : என்னிடம் அந்த தகவல் இல்லை.

SRI S. M. ANNAMALAI : சர்க்கார் பஞ்சாயத்து யூனியன் இருக்கின்ற அந்த இடங்களில் ஆசிரியர்களை மாற்றுவதில் ஆட்சேபணை ஒன்றும் கிடையாது. ஒரு பஞ்சாயத்திலிருந்து வேறு பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்றப்படுகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா? அப்படி மாற்றுகின்றபோது கரப்ஷன் கூட நடக்கிறதென்று சர்க்காருக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : வெறுமனே தகவல் இல்லாமல் கரப்ஷன் இருக்கிறதென்று பொதுவாகச் சொல்வது சரியல்ல. இதைப்பற்றி தகவல் ஏதாவது இருந்தால், அதைச் சர்க்காருடைய கவனத்திற்கு கொண்டுவந்தால், கவனிக்கப்படும். பஞ்சாயத்து யூனியனில் கரப்ஷன் இருக்கிறது என்று சொல்வது நிர்வாகத்தை பாதிக்கக்கூடியதாக இருக்கிறது.

Bridges (Parambikulam)

* 452 *Q.*—SRI P. S. CHINNADURAI : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பரம்பிக்குளம் பகுதியில் கட்டப்பட்ட பல சிறு பாலங்கள் உடைந்துவிட்டன என்பது உண்மையா ?

(ஆ) அதற்கான காரணங்கள் என்ன ?

(இ) இதன் காரணமாகச் சர்க்காருக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) No, Sir.

(*b*) & (*c*) Do not arise.

Members of Parliament (Tamilnad)

* 453 *Q.*—SRI. N. MARUDACHALAM (on behalf of SRI V. K. KOTHANDARAMAN) : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சாத்தனூரில் 1960 ஜூன் மாதத்தில் தமிழ்நாடு எம்.பி.க்களைக் கொண்ட கூட்டம் நடைபெற்றதா ?

(ஆ) அதில் கலந்து கொண்ட அமைச்சர்கள், அதிகாரிகள் யார் யார் ?

(இ) அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளின் விவரங்கள் யாவை ?